26th March 1958]

மூன்று வருஷங்களுக்கு எவ்வளவு சராசரி வருமானம் வந்திருக்கிறதோ, அதற்கு மேல் வசூல் செய்திருந்தால் அதில் 50 சத வீதமும் ராஜ்ய பெனவலன்ட் பண்டுக்கு கொடுக்கப்படும். இம்மாதிரி கணக்குப்போட்டு இனிமேல்தான் கொடுப்பார்கள்.

Sri A. V. P. ASAITHAMBI : கொடி தினம் என்பது என்ன ? அதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : யுத்த காலத்திலே யுத்தத்தில் ஈடு பட்டு கை, கால் இழந்து முடம் ஆனவர்கள், உயிர் இழந்தவர்களுடைய விதவைகள், இவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுவது.

Sri S. NAGARAJA MONIGAR : முன்னுள் ராணுவத்தினர் என்பது எதைக் குறிக்கிறது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்பு ராணுவத்தில் சேர்ந்தவர்களையோ, அல்லது திரும்பியவர்களையோ இது குறிக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : எக்ஸ்-ஸர்விஸ்மென் என்பதற்கு தமிழிலே முன்னுள் ராணுவத்தினர் என்று போட்டிருக்கிறார்கள்.

Sri P. G. MANICKAM : நமது ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் தொகையானது ஜில்லாக்களில் உள்ளவர்களுக்கு செலவழிக்க எந்த முறையிலே திட்டம் போடப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக்கூடிய எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் ஆபீஸில் ஒரு போர்டு இருக்கிறது—ஸைலர்ஸ், ஸோல்ஜர்ஸ், எக்ஸ்-ஸர்விஸ்மென் போர்டு—ஏதாவது நிவாரணம் வேண்டுமென்பவர்கள் போய் மனுச் செய்து கொள்கிறார்கள். இவர்கள் மூலமாக இந்த உதவி கொடுக்கப்படுகிறது.

Sri K. ANBAZHAGAN : படையிலே பணியாற்றிய முன்னுள் வீரர்கள், இப்படிப்பட்ட உதவித் தொகையைப் பெறுவது மிகவும் குறைவாக இருப்பதனால், அவர்கள் நல்லபடி வாழ்க்கை நடத்த கூட்டுறவு தொழில்களை ஒதுக்கி கொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறார்களா ? பஸ் போக்குவரத்து போன்ற திட்டங்களில் அவர்கள் ஈடு பட வழி வகை செய்யப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கடந்த 10 வருஷ காலமாக இந்த பழைய ராணுவ வீரர்கள் எல்லோருக்கும் பல வித சலுகைகள் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. இவற்றுள் கூட்டுறவு முறையில் நடத்தக்கூடிய தொழில்கள் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால், நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன், அதெல்லாம் திறமையாக நடத்தப்படாமல் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வரும்படியாக இருக்கிறது.

Slater Hostel and M.C. Rajah Hostel.

*419 Q.—**Sri A. GOVINDASAMY :** (On behalf of Dr. Srimathi Sathiyavanimuthu) : Will the Hon. the Minister for Works be pleased to state the number of Arunthathiyar students admitted in the Government Slater Hostel and M. C. Rajah Hostel, Madras, during the current year?

The Hon. Sri P. KAKKAN : Eight students belonging to Arunthathiyar community were admitted in the Government Slater Hostel and two students in the Government M. C. Raja Hostel during the current year.

[26th March 1958

SRI A. GOVINDASAMY : எத்தனை மாணவர்கள் இந்த இரண்டு ஹாஸ்டல்களிலும் சேர விண்ணப்பம் போட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால்தான் எத்தனை என்று சொல்லமுடியும்.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த "அருந்ததியார்" சமூகம் என்றால் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : அருந்ததியார் என்றால் ஹரிஜனங்கள்தான்.

Intensive Manuring Scheme

***420 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the amount allotted districtwise for 1956–57 and 1957–58 under the Intensive Manuring Scheme for sanctioning loans to agriculturists for the cultivation of paddy and sugarcane ?**

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மேஜையில் இருக்கக்கூடிய பேப்பரில் கண்டுள்ளபடி பார்த்தால், மற்ற எல்லா ஜில்லாக்களையும்விட மிக மிகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே கடன் கேட்பவர்கள் இல்லையா, அல்லது கேட்டாலும் கொடுக்க முடியாத காரணத்திலா, குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன் வருஷத்திலே எவ்வளவு கோரப்பட்டு எவ்வளவு செலவாயிற்று என்பதைப் பார்த்து ஒதுக்குகிறார்கள். ஆனால், டிஸம்பர் மாதத்தில் மறுபடியும் எவ்வளவு செலவாயிருக்கிறது என்பதைப் பார்த்து இன்னும் அதிகமாக வேண்டியிருந்தால் அதிகம் ஒதுக்குகிறார்கள். இவ்வாறு பார்த்தால் அதற்குமேல் தேவை இல்லாமல் இருந்திருக்கும். தேவை இருந்திருந்தால் இன்னும் ஒதுக்கப்பட்டிருக்கும். இது குறுகிய காலக் கடன். முன்பு வாங்கிய கடனில் பாக்கி இருந்தால் புதிதாகக் கடன் கொடுப்பதில்லை. கடன் பாக்கி இருப்பவர்கள் இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : What is the maximum loan given to each individual ? Is it in the form of cash or manure ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

SRI S. LAZAR : ராமநாதபுரத்திற்கு ஒதுக்கப்பட்ட 50,000 ரூபாயில் எல்லாவற்றையும் மக்கள் பெற்றுக்கொண்டார்களா ? அல்லது அதில் மிகுதியாக சர்க்காரிடத்திலே ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே மீதி இருப்பதாகத் தெரியவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : சென்ற வாரத்திலே இதே போன்று வட ஆற்காடு ஜில்லாவிலே ஒதுக்கப்பட்ட தொகையை 436 பேர்கள் கேட்டதற்கு, 126 பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டபோது அவர்களுக்கு தகுதி

[a] Printed as Appendix IV on page 561 infra.